## 26

# நபி r வழி நடப்போம்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தனித்துப் பிறந்தாலும் அவனால் பிறர் உதவியின்றி தனித்து இயங்கவோ, வாழவோ முடியாது. அவன் ஒரு குடும்பத்தின், ஒரு சமூகத்தின், ஒரு மக்கள் கூட்டத்தின் அங்கத்தவனாவான். அவனால் சமூகம் பயன்பெற வேண்டும். சமூகத்தால் அவன் பயன் பெற வேண்டும்.

ஒரு சிறந்த சமூகத்தைத் தோற்றுவிப்பதை இலட்சியமாகக் கொண்டதே இஸ்லாமாகும். இந்த வகையில் இஸ்லாம் சமூக உறவுகள் பற்றியும் தனிமனித தொடர்புகள் பற்றியும், மனிதன் சமூகத்தில் வாழும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் பேசுகின்றது.

பெற்றார்-பிள்ளைகள், சகோதர-சகோதரிகள், ஆசியர்-மாணவர், முதலாளி-தொழிலாளி, அண்டை-அயலார், அடுத்த சமூகத்தார், அடுத்த நாட்டார் என்றவாறு சமூக உறவுகளைப் பலப்படுத்துவதற்கான நற்போதனைகளை இஸ்லாம் முன்வைக்கின்றது.

இங்கு நாம் சமூக உறவு பற்றிய சில ஹதீஸ்களையும் அவற்றின் பொருளையும் நோக்குவோம்.

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

لْخَلْقُ كُلُّهُمْ عِيَالُ اللهِ وَاَحَبُّهُمْ اِلَى اللهِ اَنْفَعُهُمْ لِعِيَالِهِ (اَلْجَامِعُ الصَّغِيْرُ)

படைப்புகள் அனைத்தும் அல்லாஹ்வின் குடும்பமாகும். மனித குலத்துக்கு அதிக நன்மை செய்பவர்தான் அல்லாஹ்விடம் அதிக அன்புக்குரியவர். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), ஆதாரம்: ஜாமிஉஸ் ஸஹீர்)

மற்ற மனிதருக்கு நன்மை செய்வது அல்லாஹ்வின் அன்பைப் பெறுவதற்கான ஒரு முக்கிய வழி என்பதை இந்த ஹதீஸ் எமக்குத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது நாம் உலகில் வாழும்போது எம்மை மட்டும் பார்க்காது ஏனைய மனிதர்களின் தேவைகளையும் கருத்திற் கொண்டு அவர்களும் பலன் பெறத்தக்க வகையில் எமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அன்பும், திருப்தியும் எமக்குக் கிடைக்கும்.

முஹம்மத் r அவர்கள் அனாதைகள் விடயத்திலும் கவனம் செலுத்துவதை வலியுறுத்தியுள்ளார்கள். இவ்வாறு ஈடுபடுவதால் பாரிய நன்மைகள் கிடைப்பதைக் கூறி

عَنْ جَابِرٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

لاَ تَحْقِرَنَّ مِنَ الْمَعْرُوْفِ شَيْئاً، إِنَّ مِنَ الْمَعْرُوْفِ أَنْ تَلْقَى اَخَاكَ بِوَجْهٍ طَلْقٍ وَاَنْ تُفْرِغَ مِنْ دَلْوِكَ فِيْ إِنَاءِ اَخِيْكَ (الترمذى)

நீர் ஸதகாவை (நற்செயலை) அற்பமாகக் கருதி விடாதீர். நீர் உனது சகோதரனின் முகத்தைப் பார்த்துப் புன்னகைப்பது ஸதகாவாகும். உனது சகோதரனின் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றுவதும் ஸதகாவாகும். (அறிவிப்பவர் ஜாபிர் (ரழி), ஆதாரம்: திர்மிதி).

ஒரு சகோதரனின் தேவைகளை நிறைவு செய்வது, அவனுக்குத் தேவையான சந்தர்ப் பங்களில் உதவுவது அனைத்தும் ஸதகா என்பதை இந்த ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. நாம் சமூகத்தில் வாழும்போது மற்றவருக்கும் உதவிசெய்து வாழவேண்டும். அது அற்பமான விடயங்களிலாயினும் சரியே. மற்றுமொரு அறிவிப்பில் முஹம்மத் ﷺ அவர்கள் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

''இரண்டு மனிதர்களுக்கு இடையில் சமாதானம் செய்து வைப்பதும் ஸதகாவாகும். உனது வாகனத்தில் மற்றொருவரை ஏற்றிக் கொள்வது, அல்லது அவரின் சுமையை ஏற்றிக் கொள்வதும் ஸதகாவாகும். நல்ல விடயங்களை உரைப்பதும் ஸதகாவாகும். தொழுகைக்காக நீர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஸதகாவாகும். பாதையிலுள்ள கற்கள், முட்களை அகற்றுவதும் ஸதகாவாகும்'' (புஹாரி)

عَنْ اَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

اَلسَّاعِيْ عَلَى الأَرْمِلَةِ، وَالْمِسْكِيْنِ كَالْمُجَاهِدِ فِيْ سَبِيْلِ اللهِ، وَكَالْقَائِمِ الَّذِيْ لاَ يَفْتُرُ وَكَالصَّائِمِ الَّذِيْ لاَ يُفْطِرُ (مُتَّفَقٌ عَلَيْهِ)

''விதவைக்கும், ஏழைக்கும் உதவுவதற்காக முயற்சி செய்பவர் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்பவரைப் போலாவார். இத்தகையவர் சளைக்காமல் நின்று வணங்கியவரையும் தொடர்ந்து நோன்பு நோற்றவரையும் போன்றவராவார். (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்).

ஒரு சமூகம் உயர்வடைய வேண்டுமாயின் அதிலுள்ள நலிவுற்றவர்களும், கவனிப்பாரற்ற வர்களும் சிறந்த முறையில் கவனிக்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறந்த சமூகமொன்று உருவாகும். இந்த வகையில் மேலுள்ள ஹதீஸ், நலிவுற்றவர்கள், ஏழைகள், விதவைகள் விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இதேபோல்

முஹம்மத் ﷺ அவர்கள் அனாதைகள் விடயத்திலும் கவனம் செலுத்துவதை வலியுறுத்தியுள்ளார்கள். இவ்வாறு ஈடுபடுவதால் பாரிய நன்மைகள் கிடைப்பதைக் கூறி அவற்றின்பால் ஆர்வமூட்டியுமுள்ளார்கள்.

وَعَنْ أَبِيْ قَتَادَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ: سَمِعْتُ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُوْلُ: مَنْ سَرَّهُ أَنْ يُنَجِّيَهُ اللهُ مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ فَلْيُنَفِّسْ عَنْ مُعْسِرٍ أَوْ يَضَعْ عَنْهُ (رَوَاهُ مُسْلِمٌ)

‘‘எவர் மறுமை நாளின் (துயரத்திலிருந்தும்) கஷ்டங்களிலிருந்தும் அல்லாஹ்வின் பாதுகாப்பை ஆசை வைக்கின்றாரோ, அவர் வசதியற்ற கடனாளிக்குத் தவணை கொடுக்கட்டும் அல்லது அவருடைய கடனை மன்னித்து விடட்டும்.’’ (அறிவிப்பவர்: அபூ கதாதா (ரழி), ஆதாரம்: முஸ்லிம்)

மனிதன் தனக்குத் தேவை ஏற்படும்போது கடன்படுகின்றான். கடனை அடைக்க முடியாதபோது கஷ்டப்படுகின்றான். இக்கட்டத்தில் அவனுக்குத் தவணை வழங்குவதை அல்லது அக்கடனை நீக்கி விடுவதையே இஸ்லாம் விரும்புகிறது. இதன் மூலம் அவனுக்கு மறுமை நாளின் கஷ்டத்திலிருந்து அல்லாஹ் பாதுகாப்பளிக்கின்றான்.

عَنْ أَبِيْ هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ أَنَّ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ:
حَقُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ خَمْسٌ، رَدُّ السَّلَامِ، وَعِيَادَةُ الْمَرِيْضِ،
وَاتِّبَاعُ الْجَنَائِزِ، وَإِجَابَةُ الدَّعْوَةِ، وَتَشْمِيْتُ الْعَاطِسِ (مُتَّفَقٌ عَلَيْهِ)

‘‘ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகள் ஐந்தாகும்.

1. ஸலாமுக்குப் பதில் சொல்வது
2. நோயாளியைத் தரிசிப்பது
3. ஜனாஸாவைப் பின் தொடர்வது
4. விருந்துக்கு அழைத்தால் சமூகமளிப்பது
5. தும்மிய ஒருவர் செய்யும் பிரார்த்தனைக்குப் பதில் சொல்வது’’

(அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரழி), ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்).

இந்த ஹதிஸ் குறிப்பிடும் ஐந்து விடயங்களும், உறவுகளை வறுப்படுத்தி; பகைமை மற்றும் குரோதங்களை அகற்றி விடுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருகின்றன.

நாம் இப்பாடத்தில் சமூக வாழ்வில் மக்களுடன் உறவுகளைப் பேணுவதன் அவசியத்தையும், அவற்றைப் பேணுவதற்கான வழிமுறைகளையும் அறிந்து கொண்டோம். இவை எமது வாழ்வில் நலன்களை வளரச் செய்யக் கூடியவையாகும். அவற்றை எமது வாழ்வில் எடுத்து நடந்து வெற்றி பெற்றவர்களாவோம்.

**பயிற்சி:**

1. ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் பட்டியல் படுத்துக.
2. நீர் அண்மைக் காலத்தில் பங்குகொண்ட சமூகப் பணிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.
3. ஹதீஸ்கள் கூறும் சமூகப் பணிகளை இனங்கண்டு அவற்றைச் செய்வதால் எமக்குக் கிடைக்கும் இம்மை, மறுமைப் பயன்களை எழுதுக.

**செயற்பாடு:**

1. ‘‘பொதுப் பணிகளில் ஈடுபடுவோம்’’ என்ற தலைப்பில் ஒரு பேச்சை நிகழ்த்திக் காட்டுக.